ARAN International e-Journal of Tamil Research


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X

காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்


Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# வரலாற்றியல் நோக்கில் செங்கம்

# *Chengam in a Historical Perspective*

***M. KARTHIKEYAN**. Ph.D. Research Scholar (Full Time) Reg No: 204PHD23F7555TAM, Kalaignar Karunanidhi Govt Arts College Tiruvannamalai. (Affiliated To Thiruvalluvar University Serkkadu, Vellore- Tamil Nadu.* ***(Ph No:9080755329)***

***Dr. B. SUBBULAKSHMI**. Guide & Associate Professor of Tamil, Kalaignar Karunanidhi Govt Arts College Tiruvannamalai. (Affiliated To Thiruvalluvar University Serkkadu, Vellore- Tamil Nadu.*

ம. கார்த்திகேயன் முனைவர் பட்ட ஆய்வாளர் *Reg No: 204PHD23F7555TAM,* தமிழாய்வுத்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.

முனைவர் பா. சுப்புலெட்சுமி, நெறியாளர், தமிழாய்வுத்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை, திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.

## *Abstract*

*The Chengam taluk is one of the eight taluks in Tiruvannamalai district, rich in historical heritage and archaeological evidence. The ancient literature, Malai Padhukadam, mentions a ruler named Nannan Sey Nannan who ruled Chengam. Places like Paruvathamalai, Sey Yaru ValiyarKoodam, etc., stand testament to Chengam's historical significance.*

*Inscriptions, hero stones, sati stones, coins, copper plates, and palm leaf manuscripts provide valuable data, indicating Chengam's historical importance. This article aims to highlight Chengam's antiquity and historical data based on these findings.*

***Keywords:** Inscriptions, Historical, Archaeological evidence, Sati stones*

**ஆய்வுச் சுருக்கம்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 வட்டங்களில் வரலாற்றுப் பழமையானதும் தொல்லியல் தடயங்கள் மிகுதியும் நிறைந்துள்ள வட்டமாக செங்கம் வட்டம் உள்ளது. சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான மலைபடுகடாம் என்ற நூல் செங்கத்தை ஆண்ட நன்னன் சேய் நன்னன் என்பவனைப் பற்றிய செய்திகளைத் தருகிறது. செங்கம் வரலாற்று பழமை மிக்க ஊர் என்பதற்கு பருவதமலை, செய்யாறு, வாலியர் கூடம் போன்ற இடங்கள் சான்றுகளாக உள்ளன. கல்வெட்டுகள், நடு கற்கள் சதி கற்கள், காசுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கின்ற தரவுகள் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் போது செங்கம் வரலாற்றுப் பழமையான பகுதி என்பது புலனாகிறது. வரலாற்றின்; அடிப்படையில் செங்கத்தின் தொன்மையையும் தொல்லியல் தரவுகளையும் ஆய்வு உலகிற்கு வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** கல்வெட்டுக்கள் வரலாற்றியல், தொல்லியல்தடயங்கள், சதி கற்கள்.

**முன்னுரை**

சங்க காலம் தொடங்கி தற்காலம் வரையிலும் செங்கம் தொன்மையும் தொடர்ச்சியும் சிறப்பும் கொண்டு விளங்குகிறது. சவ்வாது மலையும் செய்யாறும் செங்கத்திற்கு மற்றும் ஒரு சிறப்புகள் ஆகும். நன்னன் சேய் நன்னன் ஆண்ட நாடு என வரலாற்றியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தற்போது பேரூராட்சியாக விளங்கும் செங்கத்தைச் சுற்றிலும் 121 கிராமம் ஊராட்சிகள் உள்ளன. இச்சிற்றூர்களில் பல இடங்களிலும் வரலாற்றின் எச்சங்கள் காணப்படுகின்றன. அவ்வகையில் வரலாற்றில் நோக்கில் எத்தகைய சிறப்பு பெற்று செங்கம் விளங்குகிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

**செங்கம் - பெயரக்காரணம்**

தஞ்சையை சோழர்கள் ஆண்டது போல மதுரையை பாண்டியர்கள், நாயக்க மன்னர்கள் ஆண்டது போல் செங்கத்தை ஆண்ட மன்னனின் பெயரின் அடிப்படையில் இவ்வூர் செங்கண் மான் நகரம் என்று அழைக்கப்பட்டது செங்கண்மா என்ற சொல் செங்கம்மா என்று மருவி காலப்போக்கில் செங்கம்மை என்று வழங்கி பின்னர் செங்கம் என்று அழைக்கப்பட்டது.

**செங்கத்தை ஆண்ட மன்னர்கள்**

1917- ஆம் ஆண்டிலிருந்து கிராம பஞ்சாயத்து ஆக இருந்த செங்கம் தற்போது 121 வருவாய் ஊராட்சிகளாக உள்ளது. செங்கம் 1962 முதல் சட்டமன்ற தொகுதியாக உருவாக்கம் பெற்றது.; பண்டைய காலத்தில் இவ்வூர் தொண்டை மண்டலத்தில் இருந்தது. தொண்டை

நாடு சான்றோர் உடைத்து, தொண்டை மண்டலம் 24 கோட்டங்களாக இருந்தன. இக்கோட்டங்களில் பல் குன்றக் கோட்டம் என்பதும் ஒன்று பல குண்றுகளை தன்னகத்தே கொண்டிருந்ததால்; இதற்கு பல் குன்றக் கோட்டம் என்ற பெயர் வழங்கலாயிற்று. குன்றுசூழ் இருக்கை நாடு என்கிறது மலைபடுகடாம். மேலும் ஏழிற் குன்றம் என்றும் கூறுகிறது. ஏழு குன்றுகளை கொண்ட நாடு என்றும் அழைக்கப்படுகிறது. இது பல் குன்றக் கோட்டம் எனவும் அழைக்கப்படுகிறது. நவீரம் என்னும் மலையைப் பெற்ற பல் குன்றக் கோட்டம் என்ற தொடர்களும்; இரண்டும் ஒரே நாட்டை குறிப்பனவாகும்.

**நன்னன் செய் நன்னன்**

பல் குன்ற கோட்டத்தின் தலைநகரமான செங்கண்மா நாடு விளங்கியது. செங்கத்தை ஆட்சி செய்வதன் நன்னன் சேய் நன்னன் ஆவான்.; இது தொண்டை மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களுள் பல் குன்றக் கோட்டமும்; ஒன்றாகும். இதனை கிபி பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த நடு கற்கள் உறுதிப்படுத்துகின்றன. பல்குன்றக்கோட்டம் என்ற சொல் மலைபடுகடாமில் இடம்பெறவில்லை அதற்குப் பதிலாக குன்ற சூழ் இருக்கை நாடு கிழவோனே என்ற சொல் இடம் பெற்றுள்ளது. குன்று சூழ் இருக்கை என்னும் சொல்லை ஒட்டி பல் குன்றக் கோட்டம் என்று பெயர் வந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நன்னன் சேய் நன்னன் என்னும் சொல்லாட்சி நன்னனின் மகன் என்ற பொருளில் வெளிப்படுகிறது. நன்னன் சேய் நன்னன் பழங்குடி இனத்தலைவன் ஆவான். நன்னன் சேய் நன்னன் என்று பெயர் வைத்திருப்பதைப் போலவே இன்றும் சவ்வாது மலை கிராம மக்கள் சாலியின் மகனுக்கு சாலி என்றும்; துக்கன் மகனுக்கு துக்கன் என்றும் வேடியப்பன் மகன் வேடியப்பன் என்று பெயர் வைக்கும் முறை இருந்து வந்துள்ளது. நன்னன் சேய் நன்னனின் வரலாற்றினை அறிய இரண்டு தரவுகள் உள்ளன. ஒன்று நவீர மலை இரண்டாவது சேயாறு இவை இரண்டும் நன்னனின் வரலாற்றினை அறிய உதவுகின்றன.

**சவ்வாது மலையும் கூத்தராற்றுப்படையும்**

பத்துப்பாட்டு நூல்களுள் ஆற்றுப்படை நூல்கள் ஐந்தில் பெரிய ஆற்றுப்படை நூல் கூத்தராற்றுப்படை என்னும் மலைபடுகடாம் என்னும் நூலாகும். இது 583 அடிகளைக் கொண்டதாகும். நன்னனின் நாடு எது என்பதை அறிய உதவுகிறது. நன்னனின் வரலாற்றினை அறிந்து கொள்வதற்கு இரண்டு குறிப்புகள் கிடைக்கின்றன. ஒன்னு சேயாறு மற்றொன்று நவீர மய்யாகும்.

கூத்தரை ஆற்றுப்படுத்தும் கூத்தர்களின் தலைவன், முதலில் நன்னன் சேய் நன்னனது கொடைச்சிறப்பை கூறுகிறான். நன்னனின் மலையை நவீர மலை என்றும் அம்மலையில்

உறைகின்ற இறைவனை காரியுண்டிக் கடவுள் என்றும் கூறுகின்றான். மலைபடுகடாமிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியாரும் இந்நூலை இயற்றிய பெருங்கோசிகனாரும் பல்குன்றக் கோட்டத்து செங்கண் மாத்து வேல் நன்னன் சேய் நன்னன் என மலைபடுகடாமில் குறிப்பிடுகின்றனர்.

சவ்வாது மலை நவீர மலை என்றும் அழைக்கப்படுகிறது சவ்வாது மலை வேலூர், போ;ர், செங்கம், திருப்பத்தூர் ஆகிய நான்கு வட்டங்களில் 427 மலை கிராமங்கள் இருக்கின்றன என்று கூறுகின்றனர். இந்த மலை கிராமங்களை நிர்வகிக்க ஊர் நாட்டாமை, ஊர் கவுண்டர், ஊர் மூப்பனார், தலைமை நாட்டாமை போன்றோர் கிராமங்களை நிர்வகிக்கின்றனர்.

**சவ்வாது மலை வாழ் மக்களின் விருந்தோம்பல் பண்பு**

சவ்வாது மலைக்கு அடிவாரத்தில் எண் திணை, அவரை, வரகு போன்றவை பயிராக இருக்கும். மூங்கில் நெல், வெண்திரு கடுகு, கவலைக் கிழங்கு, நாவல் பழம், கோவைக் கிழங்கு, பலா, வெண்ணெய், ஐவன நெல் ஆகியன மலை மீது பயிரிடுவார்கள். சிற்றூர் மக்கள் திணைச் சோறும் கறி வறுவலும் விருந்தாக வழங்கிடுவர். மலை மீது உள்ள ஊர்களுக்கு சென்றால் உடும்புக்கறி, மான் கறி, பன்றிக்கறி இவற்றை கலந்து உண்ணக் கொடுப்பர் என்பது முக்கிய செய்திகளாகும். தேரலையும் நெல்லால் சமைத்த கல்லையும் பருகலாம். தினைப்புணத்தை பன்றிகள் அழிப்பதால் வழிகளில் கற்பொறிகள் பொருத்தப்பட்டுள்ளன. எனவே மலைவழிப்பாதையில் இரவில் செல்லாதீர்கள் என வழிப்போக்கர்களை எச்சரித்து அனுப்பினர்.

**எச்சரிக்கை விடுத்த மலைவாழ் மக்கள்**

கவண் கல்லை எறிந்து யானைகளை விரட்டுவோர் என்றும், அக்கற்கள் உங்களை தாக்காதபடி மரத்திற்கு பின் புறமாக மறைந்து செல்லுங்கள் என்றும் வழியில் காட்டாறுகள் எதிர்ப்படும் அதில் நீர் ஆறாத மடுக்கள் இருக்கும், வழியில் சில இடங்களில் நீர் தேங்கி இருக்கும் அவற்றில் நடக்கும் போது, அந்நீர்நிலைகளில் இறங்கலாகாது என்றும் எச்சரித்துள்ளனர். சுற்றிக்கிடைக்கும் கொடிகளைப் பிடித்துக் கொண்டு நடந்து செல்லுங்கள் என்றும் காலையில் காட்டில் உள்ள நேரான வழியில் செல்லுங்கள். சில இடங்களில் பெரிய மரங்களைப் போல் மலை பாம்புகள் கிடக்கும் நீங்கள் விலகிச் செல்லுங்கள் குறவர்களும் பயப்படும் அளவிற்கு குன்றும் எதிர்ப்புறம் அதன் உச்சியில் இருந்து அருவிகள் விழும் இனிய ஓசையுடன் விழும் அந்த அருவியை நீங்கள் கடக்க முயல வேண்டாம். வழி தவறி சென்றவர்கள் ஊகம் புல்லை பிடித்துச் செல்வது வழக்கமாகும்.

**சேயாறு**

பருவத மலையை ஒட்டி நன்னனது நாட்டை வளப்படுத்திய செய்யாறு சவ்வாது மலையில்; தோற்றம் பெற்று திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டங்களின்; வழியாக ஓடி கடலில் கலக்கிறது. மலைபடுகடாம்; என்னும் நூலில் நன்னன் சேய் நன்னனிடம் பரிசுப் பெற்ற கூத்தன் ஒருவன் பரிசு பெற உள்ள மற்றோர் கூத்தனுக்கு வழிகாட்டும் போது எப்போதும் தண்ணீர் ஒய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் செய்யாற்றின் கறை வழியாக செல்லுக என்றான் .

நன்னன் சேய் நன்னனின் நாட்டில் உள்ளோர் வாழ்த்தும்போது கூட சேயாற்றின் மழையை விட அதிக வாழ்நாள் வாழ்க என வாழ்த்தும் மரபு இருந்துள்ளது இதனை

“சேயாற்று வடுவாழ் எக்கர் மலையினும் பலவே” - (மலைபடுகடாம் வரி 555)

சேயாற்றின் புனிததன்மையை அருணாச்சல புராணம் 66-வது பாடலில் குறிப்பிடுகிறது. திருவண்ணாமலையின் பெருமையை மார்க்கண்டேய முனிவருக்கு சொல்ல வந்த நந்தி தேவர் திருவண்ணாமலைக்கு வலப்பக்கம் பெண்ணையாறு இடப்பக்கம் செய்யாறு அருகில் கமண்டல நதியும் ஓடுகிறது இவைகளில் மூழ்கினால் ஒன்றுக்கு ஆயிரம் கிடைக்கும் என்கிறார்.

**ஆண்டிப்பட்டி**

செங்கம் மற்றும் ஆண்டிப்பட்டியில் 1968 ஆம் ஆண்டு செய்யப்பட்ட அகழ்வாரட்சியில் 143 ஈயக்காசுகள் கிடைத்துள்ளன இவை கி.பி இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டை; சார்ந்தவையாக இருக்க கூடும் என்பதை தொல்லியல் ஆய்வாளர்களான கே.ஜீ கிருஷ்ணன், முனைவர் நாகசாமி, முனைவர் கே வி ராமன், திரு நடன காசிநாதன், ஐராவதம் மகாதேவன் போன்ற தொல்லியல் அறிஞர்கள் இக்காலங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களை வாசித்து வரலாற்றுத் தரவுகளை தந்துள்ளனர். எதிரான் சேந்தன் என்ற மன்னனைப் பற்றிய குறிப்பு ஐராவதம் மகாதேவன் தெளிவாக குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்.

**வளையாம்பட்டு**

வளையம் மதியும் அழகியான் பட்டு என்பது வளையாம் பட்டு என்று மருவியுள்ளது. கிபி 12 ஆம் நூற்றாண்டிற்கு முன்பே வளையாம் பட்டு நீர்த்தேக்க ஏரி கட்டப்பட்டுள்ளது. இந்த ஏரிக்கு அருகில் வேந்தி அம்மன் கோயில் உள்ளது இந்த கோயிலின் அருகே இருக்கும் ஏரி மதகின் குத்துக்கல்லில் எழுதப்பட்டிருக்கும் கல் கல்வெட்டில் வளையம் மதியம் அழகியான் பட்டு என்று எழுதப்பட்டுள்ளது.

**அம்மாபாளையம்**

செங்கத்திற்கு அருகே 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அம்மா பாளையம் இந்த ஊருக்கு செங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பார்த்தசாரதி சுவாமிகள் கருட சேவையை முடித்துக்கொண்டு பதினோராவது திருவிழா அன்று அம்மாபாளையம் வந்து தீர்த்தவாரி கண்டுப்போவது வழக்கமாக உள்ளது. அச்சுவாமிகள் தங்கும் இடத்தை அம்மா மண்டபம் என்றனர் அம் மண்டபத்தில் ராமர் பட்டாபிஷேகம் காட்சியும் தளவாய் நாயக்கர் குடும்பத்துடன் அதை வணங்கும் காட்சியும் மிகச் சிறப்பாக செதுக்கி உள்ளனர். இவ் ஊரில் இரண்டு குளங்கள் உள்ளன பெரிய அம்மன் குளம், சின்ன அம்மன் குளம், பெரிய அம்மன் குளத்திற்கு நான்கு பக்கமும் வழி உண்டு. சின்ன அம்மன் குளம் குடிநீர் எடுப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட்ட குளமாக உள்ளது.

**அம்மணி அம்மன் வரலாறு**

செங்கத்திற்கு அருகிலுள்ள சென்னசமுத்திரம் கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் அம்மணி அம்மன் இவருக்கு இளமையிலேயே திருமணம் நடந்தும் இல்ல துறவியாகவே வாழ்ந்தார். நினைத்தாலே முக்தி தரும் அண்ணாமலையார் மீது அளவுகடந்த பக்தி கொண்டவர். அண்ணாமலையார் திருக்கோயில் ஒன்பது கோபுரங்களையும் நான்கு நுழைவுவாயில்களையும் கொண்டது. இதில் அம்மணி அம்மன் பெயரில் அமைந்த வடக்கு கோபுரம் அம்மணி அம்மாவால் கட்டப்பட்டது. அரச பரம்பரையினர் கட்டிய கோபுரங்களில் வடக்குக் கோபுரம் கட்டும்பொழுது பல தடைகளின் காரணமாக வடக்கு கோபுரம் கட்டுவதில் தோய்வு ஏற்பட்டது. இவ்வடக்கு கோபுரத்தை முடித்தவர் அம்மணி அம்மன் ஆவார் எனவே அவரின் பெயரலேNயு இக்கோபுரம் அம்மணி அம்மன் கோபுரம் என்றே அழைக்கப்படுகிறது. அம்மையார் மைசூர் சென்று நிதி திரட்டி வந்து கோபுரத்தை கட்டினார் என்ற தகவலும் அறிய முடிகிறது.

**அம்மணி அம்மன் சமாதி**

அம்மணி அம்மன் தன் இறுதி நாளில் திருவண்ணாமலையில் தங்கி பலவகை திருப்பணிகளை செய்தார் எட்டாவது இலிங்கமான ஈசானி லிங்கத்திற்கு எதிரில் இவரது ஜீவசமாதி உள்ளது அம்மணி அம்மாளின் நினைவாக சென்ன சமுத்திரத்திரக் காட்டில் ஒரு குளமும் 5 அடி உயரத்துக்கு கோயிலும் பூந்தோட்ட காடும் உள்ளது. அவர் உபயோகித்த மைசூர் அரசர் அளித்த கூரை நாட்டுப் பட்டுப்புடவை மற்றும் வானவில்லின் ஏழு வண்ணங்களால் பிரதிபலிக்கும் கல் மோதிரம், தசாவதாரம் சின்னம் பொறித்த சொம்பு,

மேல்பாகம் எது கீழ்பாகம் எது என அறிய முடியாதபடி வேலைப்பாடு அமைந்த விபூதி பெட்டி ஆகியவைகளை வைத்து ஆண்டுக்கு ஒருமுறை சென்னசமுத்திரம் மக்கள் விழா எடுக்கின்றனர்

**வாலியர் மேடு**

செங்கத்திற்கு அருகில் தான கவுண்டன் புதூர் என்ற கிராமத்திற்கு அருகில் வாலியர் மேடு என்னும் பகுதி இருக்கிறது இங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட கற்கால மனிதர்களின் குடியிருப்புகள் இருந்ததற்கான அடையாளங்களாக கற்குவியல்கள் காணப்படுகின்றன. சவ்வாது மலையின் பட்டறை காடு என்னும் ஊருக்கு அருகில் வாலியர் கூடம் என்னும் இடத்தில் கற்கால மனிதர்கள் வாழ்ந்த கற் பலகைகள் குகை கற்கள் போன்ற அமைப்புகள் உடைய கற்கால மனிதர்களின் குடியிருப்புகள் காணப்படுகின்றன.

**தென்பெண்ணை ஆற்றங்கரை**

தென்பெண்ணை ஆற்றங்கரையில் நூற்றுக்கணக்கான தொல்லியல் எச்சங்கள் நமக்கு கிடைக்கின்றன. அந்த வகையில் தானிப்பாடி அடுத்த தா. வேலூர் என்ற இடத்தில் நாய்க்கு நடுகள்; வைத்துள்ளதை அறிய முடிகிறது நாய் பன்றிணையுடைய உருவம் பொறித்த நடுகள் கண்டுபிடிக்கப்பட்டது.

**சின்னையன் குளம்**

நாயக்க மன்னர்களின் ஆட்சி காலத்தில் கிபி 16, 17 ஆம் நூற்றாண்டில் சின்மய நாயக்கர் என்பவரால் தன் மகளின் நலனுக்காக ஒரு குளம் வெட்டப்பட்டது. அது இன்றளவும் சின்னமயநாயக்கன் பெயரால் சின்மய நாயக்கன் குளம் என்று அழைக்கப்படுகிறது. இக்குளம் 120 சதுர அடி பரப்பில் நான்கு புறமும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டது. இக்குளம் அமைந்துள்ள ஊர் சின்னையன் பேட்டை என்றே அழைக்கப்படுகிறது.

**தாமரைப்பாக்கம் கல்வெட்டு**

செங்கம் மற்றும் கடலாடிக்கு அருகில் செய்யாற்றின் தென்கரையில் அமைந்துள்ள சிற்றூர் தாமரைப்பாக்கம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சிவன் கோயிலை அமைத்து அவ்வூர் மக்கள் வழிபட்டு வந்திருக்கின்றனர். இங்குள்ள அக்னீஸ்வரன் கோயில் கல்வெட்டுகளை தொல்பொருள் ஆய்வுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். இந்த கல்வெட்டுகளில் அப்போது பழக்கத்தில் இருந்த நீதி முறை, நில அளவை முறை, வரி, உடன்கட்டை ஏறுதல், நிலதானம், ஆடுகள் தானம், பொந்தானம், சிவபூஜை ஆகியவற்றைப் பற்றி அறிகிறோம். சிலர் நந்தா விளக்கு ஏற்றுவதற்கு 90 ஆடுகளைத் தானமாக கொடுத்திருந்ததை கல்வெட்டுகள் கூறுகின்றன.

**முதுமக்கள் தாழி**

செங்கம் ராஜவீதி ராஜீ உடையார் வீட்டுத் தோட்டத்தில் முதுமக்கள் தாழி கண்டுபிடிக்கப்பட்டது. இறந்தவர்களை பிரம்மாண்டமான பிரமிடுகளுக்குள் வைப்பது எகிப்தியர்களின் வழக்கம், இறந்தவர்களை மலை மேல் எடுத்துச் சென்று கயிற்றில் கட்டி கழுகுகளுக்கு உணவாக்குவது எகிப்திய மக்களின் வழக்கமாகிறது. இறந்தவர்களை பெரிய தாழில் வைத்து அவர்கள் பயன்படுத்திய பொருட்களை தாழியில் வைத்து புதைப்பது மரபாகும்.

**நடுகற்கள்**

ஆண் மகனுக்கே உரிய வீரத்துடன் வாழ்ந்து இறந்த வீரர்களுக்கு பின் எச்சமாய் எஞ்சி நிற்ப்பது நடு கற்கள், இவை செங்கம் பகுதியில் தான் மிகுதியாக காணப்படுகிறது. எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். தொல்லியலாளர்களில் நாகசாமி அவர்கள் செங்கம் நடு கற்கள் என்னும் தலைப்பில் ஒரு நூலையே வெளியிட்டுள்ளார். இந்த நடு கற்கள் ஊருக்கு வெளியே ஏரிக்கரை மற்றும் வேடிப்பன் கோவிலுக்கு அருகில் நிறைய நடு கற்கள் காணப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். செங்கம் வீரணம் சாத்தனூர், தொண்டைமானூர், தென் முடியனூர், எடைக்கல், போந்தை, கடலாடி மேல புஞ்சை, தாழையூத்து, தான கவுண்டன் புதூர் போன்ற பல ஊர்களில் வேடியப்பன் கோவிலுக்கு அருகில் நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இலக்கியங்கள், கல்வெட்டுகள், நீர்ப்படுகைகள், நடுகற்கள், காசுகள், முதுமக்கள் தாழி போன்று வரலாற்றுத் தரவுகள் மிகுதியாக நிறைந்த பகுதியாக செங்கம் உள்ளதை அறியமுடிகிறது. மேலும் செங்கத்தை ஆண்ட மன்னன் நன்னன்சேய் நன்னன் என்பதும் இவ்வாய்க்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.மலைபடுகடாம், அ. மாணிக்கனார், வர்த்தமானன் பதிப்பகம், பதிப்பு 1999.

2.செங்கம் நடுகற்கள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, பதிப்பு 1972.

3.செங்கம் வேணுகோபால் பார்த்தசாரதி கோவில் கும்பாபிஷேக மலர், பதிப்பு 2008.

4.ர. பூங்குன்றன், தொல்குடிவேளிர்வேந்தர், பதிப்பு 2016.

5.சைவ எல்லப்ப நாவலர், அருணாச்சல புராணம், நா. கதிரை வேற்பிள்ளை உரை பதிப்பு 1927.

*References:*

1. *Malaipadukadam*, A. Manickanar, Varthamanan Publications, 1999 Edition.

2. *Sengam Nadukarkal* (Sengam Hero Stones), Department of Archaeology, Government of Tamil Nadu, 1972 Edition.

3. *Sengam Venugopal Parthasarathy Temple Kumbabishekam Souvenir*, 2008 Edition.

4. R. Poongundran, *Tholkudi Velir Vendhar*, 2016 Edition.

5. Saiva Ellappa Navalar, *Arunachala Puranam*, Commentary by N. Kathiraivel Pillai, 1927 Edition.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ARAN International e-Journal of Tamil Research

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com